www.Padasalai.Net www.TrbTnpsc.com

**SALEM DISTRICT**

HSS **அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024**

**11 - ஆம் வகுப்பு** **பொதுத்தமிழ்**

**காலம் : 3.00 மணி** **மதிப்பெண்கள் : 90**

அறிவுரைகள் : 1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிப்பில் குறைகள் இருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.
2) நீலம் மற்றும் கருப்பு மையினை மட்டுமே எழுத, அடிக்கோடிடப் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - I

குறிப்பு : 1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 2) கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளுள் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் எழுதவும். 14 X 1 = 14

1. மொழிமுதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.
அ) டமாரம், இங்ஙனம் ஆ) அன்னம், கிண்ணம் இ) றெக்கை, அங்ஙனம் ஈ) ரூபாய், லட்சாதிபதி
2. தெற்கிலிருந்து வீசும் காற்று அ) கொண்டல் ஆ) கோடை, இ) வாடை ஈ) தென்றல்
3. கீழ்க்காண்பனவற்றுள் 'இறைச்சி' பற்றியக் கூற்றைத் தேர்க.
அ) குறியீடுகளைக் கொண்டு உருவாக்கப்படும் ஆ) ஒப்பீட்டுச் செறிவும் பொருள் அழுத்தமும் சிறக்க அமையும்
இ) வினை, பயன், வடிவம், நிறம் ஆகிய நான்கின் அடிப்படையில் தோன்றும்
ஈ) உரிப்பொருளோடு நேரிடைத் தொடர்பில்லாத குறிப்புப் பொருள்.
4. Value Education தமிழாக்கச் சொல்லைத் தேர்க.
அ) தொழிற்கல்வி ஆ) வாழ்க்கைக் கல்வி இ) உயர்கல்வி ஈ) மதிப்புக் கல்வி
5. ஒப்புரவு என்பதன் பொருள் .......... .
அ) அடக்கமுடையது ஆ) பண்புடையது இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்வமுடையது
6. பூத்த, பெரும்புகழ் இச்சொற்களின் இலக்கணக் குறிப்புகள் முறையே
அ) பெயரெச்சம், பண்புத்தொகை ஆ) வினையெச்சம், வினைத்தொகை
இ) பண்புத்தொகை, பெயரெச்சம் ஈ) வினைமுற்று, வினையெச்சம்
7. ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பு எது? அ) மொழி பெயர்ப்பாளர்
ஆ) இந்தியாவின் பெப்பிசு இ) தலைமைத் துவிபாஷி ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை
8. ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க.
அ) காவலாளி ஆ) மேலாளர் இ) உதவியாள் ஈ) ஆசிரியர்
9. இயற்கையிடம் தனிமொழி பேசிய மனோன்மணீய கதாபாத்திரம்
அ) ஜீவகன் ஆ) சுந்தரமுனிவர் இ) நடராசன் ஈ) புருடோத்தமன்
10. கூவும் குயிலும் கரையும் காகமும் - தொடரில் இடம் பெற்ற மரபு
அ) பெயர் மரபு ஆ) வினை மரபு இ) ஒலி மரபு ஈ) இவை மூன்றும்
11. தொல்காப்பியத்தில் உள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை
அ) 9 ஆ) 3 இ) 27 ஈ) 13
12. காவடிச் சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர்
அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதியார்
13. 'மருந்துழைச் செல்வான்' என்ற சொல்லின் பொருள்
அ) மருத்துவர் ஆ) மருத்துவ உதவியாளர் இ) மருந்து ஈ) நோயாளி
14. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1) குறிஞ்சி | - | I) ஓரம்போகியார் | அ) 1-IV, 2-III 3-II 4-I |
| 2) முல்லை | - | II) ஓதலாந்தையார் | ஆ) 1-III, 2-I, 3-IV, 4-II |
| 3) மருதம் | - | III) கபிலர் | இ) 1-III, 2-IV, 3-I, 4 - II |
| 4) பாலை | - | IV) பேயனார் | ஈ) 1-II, 2-I, 3-IV, 4-III |

## பகுதி - II (பிரிவு - 1)

**குறிப்பு : எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.** 3 X 2 = 6

15. பாயிரம் பற்றி நீ அறியும் கருத்து யாது?
16. காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் சென்றது?
17. பதிற்றுப்பத்தில் இரண்டாம் பத்தின் பாட்டுடைத் தலைவனும் பாடியவரும் யாவர்?
18. எப்போது மருந்து தேவையில்லை என்று திருவள்ளுவர் கூறுகிறார்?

**பிரிவு - 2 குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.** 2 X 2 = 4

19. வைக்கோல் பற்றி மிகச் சிறந்த ஆய்வைச் செய்த ஜப்பான் அறிஞர் யார்? அவர் எழுதிய நூலைக் குறிப்பிடுக.
20. கோட்டை என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?
21. 'நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்' என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.

**பிரிவு - 3 குறிப்பு : எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை எழுதுக.** 7 X 2 = 14

22. உயிரீறு, மெய்யீறு - விளக்குக.
23. **பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.**
அ) காலத்துக்கேத்த மாரிப் புதுசுபுதுசா மொழி வடிவத்த மாத்தனும்
ஆ) காலங்காலத்தால எந்திரிச்சிப் படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

24. ஆசிரியப்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
25. நான் வாரத்தின் இறுதிநாள்களில் நூலகத்திற்குச் செல்வேன். (பொருள் மாறா எதிர்மறைத் தொடராக மாற்றுக).
26. **ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி எழுதுக.** அ) மண்ணுடை ஆ) பெருங்கல்
27. அச்சம், காய்ச்சல், தோற்றல், சூழ்க, அப்பம், வீழ்ச்சி – இச்சொற்களில் உடனிலை, வேற்றுநிலை, ஈரொற்று மெய்ம்மயக்கச் சொற்களைக் கண்டறிந்து எழுதுக.
28. **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**
அ) அனைத்துத் துறைகளிலும் ஆண்களை போலவேப் பெண்களும் அரசு பணியை பெற வேண்டும்.
ஆ) சான்றோர் மிகுந்தப் பொறுப்புடன் சிறப்பான சேவைப் புரிந்து கொள்கையை நிலைநாட்ட செய்தனர்.
29. **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.** அ) தங்கை ***(அல்லது)*** ஆ) அறிவில்லாதவர்
30. ஏதேனும் ஒன்றனுக்கு பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக. அ) வைத்தார் ஆ) உண்டான்

## பகுதி – III பிரிவு – 1

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.** 2 X 4 = 8

31. சு.வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?
32. மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.
33. ‘சேரநாடு செல்வ வளம் மிக்கது’ என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.
34. மருந்து, மருந்துவர், மருந்துவம், ஆகியன பற்றித் திருக்குறள் கூறுவன யாவை?

**பிரிவு – 2 குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.** 2 X 4 = 8

35. வேதிக்கலப்பில்லாத பூச்சிக் கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.
36. ஃபிரெஸ்கோ ஓவியங்கள் கற்றளிக்கோவில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?
37. சமணப் பள்ளிகளும் பெண்கல்வியும் – குறிப்பு வரைக.
38. தாமஸிகம் என்றால் என்ன?

**பிரிவு – 3 எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.** 3 X 4 = 12

39. ‘புகழ் எனின் உயிருங் கொடுக்குவர், பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் ; இப்புறநானூற்று பாடல் எத்திணையைச் சார்ந்தது? விளக்குக. ***(அல்லது)***
‘வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல் – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியைக் கூறி விளக்குக.
40. இலக்கிய நயம் பாராட்டுக மையக் கருத்து எழுதி ஏற்புடைய மூன்று நயங்களைச் சுட்டி எழுதுக.

*பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் – புவி*
*பேணி வளர்த்திடும் ஈசன் ;*
*மண்ணுக்குள்ளே சிலமூடர் – நல்ல*
*மாதர் அறிவைக் கெடுத்தார்.*
*கண்கள் இரண்டினில் ஒன்றைக் – குத்தி*
*காட்சி கெடுத்திட லாமோ?*
*பெண்கள் அறிவை வளர்த்தால் வையம்*
*பேதைமை யற்றிடும் காணீர்.*

***– பாரதியார்***

41. **கீழ்க்காணும் மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**
அ) சொந்தக்காலில் நிற்றல் ஆ) நிறைகுடம் இ) கண்ணாயிருத்தல் ஈ) அவசரக்குடுக்கை
42. ‘பேசு’ என்ற வேர்ச் சொல்லின் வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம், வினையாலணையும் பெயர் எழுதித் தொடரமைக்க.
43. **தமிழாக்கம் தருக.**
அ) Knowledge rules the world.
ஆ) In nature, light creates the colour. In picture, colour creates the light.
இ) Culture does not make people, people make culture.
ஈ) Param Vir Chakra award, highest award for army personnal.

## பகுதி – IV

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக.** 3 X 6 = 18

44. திருமலைமுருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்கள் விவரிக்க. ***(அல்லது)*** பாரதிதாசன் ஒரு ‘புரட்சிக்கவி’ என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.
45. கல்லும் கதை சொல்லும் என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக. ***(அல்லது)*** பௌத்தக் கல்வி, சமணக்கல்வி, மரபு வழிக்கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க.
46. வாடிவாசல் கதை வாயிலாக, நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக. ***(அல்லது)*** நர்த்தகி நடராஜின் நேர்காணல்வழி அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

## பகுதி – V

47. **அடிபிறழாமல் எழுதுக.** 4 + 2 = 6
அ) ஆக்கியோன் பெயரே ........ எனத் தொடங்கும் நன்னூல் பாயிர நூற்பா.
ஆ) ...... செயல் – என முடியும் குறட்பா.



M.JEEVA. M.A,B.Ed,M.Phil., PGT (TAMIL)

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com